சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 12796/E/2024 & CP 6071/E/2024**

திரு.K.நாராயணன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பெரம்பூர் வட்டம், சென்னை மாவட்டம். பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

**SA 12796/E/2024**

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.K.நாராயணன் அவர்கள் சார்பு அவரது பிரதிநிதி திரு.கோவை.S.S.மனோ அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திரு.S.விக்னேஷ், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பெரம்பூர் வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 15.07.2024 |
| **கோரிய தகவல்**, குறைதீர் மனுவின் கடித நாள் 30.05.2024 என பார்வையில் குறிப்பிட்டு, குறைதீர் மனுவை பெற்றுக்கொண்ட நாள், மாதம், வருடம் என்ன, மேற்படி மனுவை ஏற்றுக் கொண்ட தங்களது அலுவலக குறிப்பேட்டின் பதிவு செய்த எண் மற்றும் நாள் குறித்த ஒளி நகல் உள்ளிட்ட 6 இனங்களில் தகவல்களை | |

| | |
|---|---|
| வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், பெரம்பூர், சென்னை 39 அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 26.08.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 30.09.2024 |

**CP 6071/E/2024**

| | |
|---|---|
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 15.07.2024 |
| **கோரிய தகவல்**, குறைதீர் மனுவின் கடித நாள் 30.05.2024 என பார்வையில் குறிப்பிட்டு, குறைதீர் மனுவை பெற்றுக்கொண்ட நாள், மாதம், வருடம் என்ன, மேற்படி மனுவை ஏற்றுக் கொண்ட தங்களது அலுவலக குறிப்பேட்டின் பதிவு செய்த எண் மற்றும் நாள் குறித்த ஒளி நகல் உள்ளிட்ட 6 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், பெரம்பூர், சென்னை 39 அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | ந.க.அ.1/1867/2024, நாள் 30.10.2025 |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | --- |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப்பிரிவு 18(1)-ன்கீழ் புகார் மனு நாள் | 26.11.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தங்கள் அலுவலக கடித ந.க.எண்.அ1/1867/2024, நாள் 28.11.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. அவர் இவ்வாணையத்திற்கு முகவரியிட்டுள்ள 27.06.2026 தேதியிட்ட கடிதத்தில், இன்றைய விசாரணையில் பங்குபெற தனது பிரதிநியான

திரு.கோவை.S.S.மனோ அவர்கள் ஆஜராவதாக குறிப்பிட்டுள்ளார். அதன்படி அவர் பிரதிநி ஆஜராக ஆணையத்தால் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி மனுதாரரின் பிரதிநிதி, இவ்வழக்கில் கோரிய தகவல் தனக்கு வழங்கப்படவில்லை என எடுத்துரைக்கிறார்.

2. மனுதாரர் பிரதிநி மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) மனுதாரர் ஒரே தேதியிட்டு ஒரே விதமான தகவல்களை வழங்கக் கோரி இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது வழக்கு எண்கள் SA 12796/E/2024 & CP 6071/E/2024-ஆக பதிவு செய்யப்பட்டு, இன்று ஒருசேர விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

b) இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரியுள்ள தகவல்களுக்கு, பொதுத் தகவல் அலுவலரால் 28.11.2025 தேதியிட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், மனுதாரர் கோரியுள்ள 6 இனங்களுக்கான தகவல்களில் இனம் 1, 2, 3-க்கு வழங்கப்பட்ட தகவல் என ஆணையத்தால் கருதப்படுகிறது. மேலும், 6-க்கு வழங்கப்பட்ட தகவல் குறித்து பொதுத் தகவல் அலுவலரால் இவ்வாணையத்தில் ஆவணம் சமர்ப்பிக்கப்படவில்லை. இனம் 4, 5 மற்றும் 5-க்கு வழங்கப்பட்ட தகவல் உரிய தகவல் அல்ல என ஆணையத்தால் கருதப்படுகிறது. மேலும், மனுதாரர் பிரதிநிதி, மேற்படி தகவல் தனக்கு வழங்கப்படவில்லை என எடுத்துரைக்கிறார். எனவே, மேற்படி 1 முதல் 6 இனக்களுக்கான தகவல்களை, சட்டப் பிரிவு 7(6)-ன்படி கட்டணம் ஏதுமின்றி, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

c) **மேலும் முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், பெரம்பூர் அவர்களுக்கு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது**:-

i. மனுதாரரின் 15.07.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பெற்றுக்கொண்டு, மனு பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை

<u>மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும்,</u>

ii. 26.08.2024 தேதியிட்ட மனுதாரரின் சட்டப் பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு தகவல் வழங்கத் தவறிய அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தினை பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக, **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது**.

d) மேற்படி உத்தரவினை முழுமையான நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை குறிப்பிட்ட தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12796/E/2024 & CP 6071/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பூர் வட்டம், சென்னை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பூர் வட்டம், சென்னை மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.K.நாராயணன், த/பெ.S.கண்ணன்,
ப.எண்.11/2, பு.எண்.44, திருமலை ராஜா தெரு,
அயனாவரம், சென்னை - 600 023.

Copy to: File MP/PA-